Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 043 | புதன்கிழமை Wednesday | 13.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழகத்தில் 717 டாஸ்மாக் கடைகளை மூட முதலமைச்சர் விஜய் உத்தரவு




தமிழ்நாட்டில் 4,829 'டாஸ்மாக்' மதுகடைகள் இயங்கி வருகின்றன. மாதம் ரூ.4 ஆயிரம் கோடி அளவுக்கு மது விற்பனை நடைபெற்று வருகிறது. கடந்த நிதி ஆண்டில் மட்டும் மது விற்பனை மூலம் அரசுக்கு ரூ.48 ஆயிரத்து 344 கோடி வருவாய் கிடைத்துள்ளது. அரசுக்கு அதிக வருவாய் ஈட்டி தரும் துறையாக 'டாஸ்மாக்' இருக்கிறது. ஆனால் மதுவால் பல குடும்பங்கள் சீரழிந்து வருவதால், பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து இருந்து வருகிறது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சி அமைந்துள்ளது. விஜய் முதல்-அமைச்சராக பதவியேற்றவுடன். தமிழகத்தில் போதைப் பொருள் பரவலைக் கட்டுப்படுத்தவும், இளைஞர்களைப் பாது காக்கவும் 65 சிறப்பு படைகள் அமைக்கப்படும் என்று ஆணை பிறப்பித்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் 717 டாஸ்மாக் கடைகளை மூட முதல்-அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படி வழிபாட்டு தலங்கள் அருகிலுள்ள 276 கடைகள், கல்வி நிறுவனங்கள் அருகிலுள்ள 186 கடைகள், பஸ்-ரெயில் நிலையம் அருகே 500 மீட்டர் தொலைவுக்குள் செயல்படும் 255 'டாஸ்மாக்' கடைகளை 2 வாரங்களுக்குள் மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

மூடப்படும் கடைகளில் பணியாற்றி வந்த ஊழியர்கள் வேறு கடைகளுக்கு பணி அமர்த்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் டாஸ்மாக் பார்களில் சட்டவிரோத மது விற்பனை தடுப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்த ப்பட்டுள்ளது.

மது இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக எனது தலைமையில் பல கட்ட போராட்டங்களை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் நான் நடத்தி உள்ளேன். தமிழகத்தில் ஒரு சொட்டு மது கூட இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கொள்கை. அதற்காக தமிழக அரசிடம் நீண்ட நாட்களாக நான் கோரிக்கைவைத்து வருகிறேன். அந்த எண்ணங்களை ஈடு செய்யும் வகையில் ஒரு நல்ல தொடக்கமாக தமிழக முதல்-அமைச்சராக பொறுப்பேற்றுள்ள ச.ஜோசப் விஜய் தமிழகத்தில் உள்ள டாஸ்மார்க் நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுகின்ற மதுபான கடைகளில், வழிபாட்டு தலங்கள் அருகில் 276 மது கடைகளும், கல்வி நிறுவனங்கள் அருகில் 186 மது கடைகளும், பேருந்து நிலையம் அருகில் 255 மதுபான கடைகளும் சேர்த்து மொத்தம் 717 மதுபான கடைகளை இரண்டு வார காலங்களில் மூடப்பட வேண்டும் என உத்தரவிட்டுள்ளது பாராட்டுக்குரியது.

பொதுமக்கள் சார்பில் நீண்ட நாட்களாக இருந்த இந்த கோரிக்கையை கொண்டு நான் பலமுறை கோரிக்கை வைத்து அறிக்கைகளையும் அளித்து உள்ளேன். அவைகளை தொடர்ந்து தற்போது பள்ளி மாணவர்களின் நலனை பேணும் பொருட்டும் மற்றும் பெண்கள் பாதுகாப்பு கருதி சமூக நலன் கருதி 717 டாஸ்மார்க் நிறுவனம் மூலம் நடத்தப்படும் மதுபான கடைகளை மூடுவதற்கு உத்தரவிட்ட தமிழக முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய்க்கு எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் செயல்படும் டாஸ்மாக் கடைகளுக்கு, திறந்து இருக்கும் நேரத்தை குறைத்து நிர்ணயம் செய்ய வேண்டும். தமிழக முதல்வர் ச.ஜோசப் விஜய் அவரது இந்த ஐந்து ஆண்டு ஆட்சிக்குள் தமிழகத்தில் முழு மதுவிலக்கை கொண்டு வந்து ஒரு சொட்டு மது இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கு தமிழக முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமையில் செய்வார் என்பதற்கு இது ஒரு நல்ல தொடக்கத்திற்கான வழியாக நான் கருதுகிறேன். 717 மதுபான கடைகளை மூடியதற்கு முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய்க்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் மே.3ல் நடந்த நீட் தேர்வு ரத்து: தேசிய தேர்வு முகமை அறிவிப்பு



வினாத்தாள் கசிந்த விவகாரத்தின் எதிரொலியாக நாடு முழுவதும் கடந்த 3-ம் தேதி (மே.3) நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறு தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மருத்துவ இளநிலை பட்டப்படிப்புக்கான நீட் தேர்வு (NEET UG 2026) கடந்த 3ம் தேதி நாடு முழுவதும் நடத்தப்பட்டது. எனினும், தேர்வுக்கு முன்பாக வினாத்தாள் கசிந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையில் வினாத்தாள் கசிந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாக, தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தேசிய தேர்வு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில், "தேசியத் தேர்வுகளை நியாயமான, பாதுகா ப்பான மற்றும் நம்பகமான முறையில் நடத்துவதில் தேசிய தேர்வு முகமை கொண்டுள்ள உறுதிப்பாட்டுக்கு இணங்க, மே 3ம் தேதி நடந்த நீட் தேர்வு தொடர்பாக எழுந்துள்ள புகார்கள் தொடர்பாக சுயாதீனமான சரிபார்ப்பு மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக மத்திய முகமைகளுக்கு தேசிய தேர்வு முகமை கடந்த 8ம் தேதி பரிந்துரை செய்திருந்தது.

மத்திய முகமைகளுடன் ஒருங்கிணைந்து தேசிய தேர்வு முகமை மேற்கொண்ட ஆய்வுத் தகவல்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகளால் பகிரப்பட்ட விசாரணை முடிவுகளின் அடிப்படையில், மே 3 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட NEET (UG) 2026 தேர்வை ரத்து செய்யவும், தனியாக அறிவிக்கப்படும் தேதிகளில் அத்தேர்வை மீண்டும் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய தேர்வு முகமைக்குக் கிடைத்த தகவல்களையும், சட்ட அமலாக்க முகமைகளால் பகிரப்பட்ட விசாரணை முடிவுகளையும் ஒருங்கிணைத்துப்பார்க்கும்போது, தற்போதைய தேர்வு நடைமுறையைத் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க இயலாது என்பது உறுதியாகிறது.

இவ்விவகாரம் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்வதற்காக, இதனை மத்தியப் புலனாய்வுத் துறைக்கு (CBI) பரிந்துரைக்க இந்திய அரசு முடிவெடுத்து ள்ளது. அத்துறையின் விசாரணைக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும், உதவிகளையும் தேசிய தேர்வு முகமை வழங்கும். இந்த விசாரணைக்கு முழு ஒத்துழைப்பை அளிக்கும்.

தேசியத் தேர்வு முகமையின் நம்பிக்கையை காக்கும் வகையிலும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேர்வு மீண்டும் நடத்தப்படுவதால், தேர்வர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் சிரமங்கள் ஏற்படும் என்பதை தேசிய தேர்வு முகமை நன்கு உணர்ந்துள்ளது. இத்தகைய பின்விளைவுகளை தேசிய தேர்வு முகமை சாதாரணமாகக் கருதவில்லை. இருப்பினும், இதற்கு மாற்றாக வேறு முடிவை எடுத்திருந்தால், அதிக தீங்குகள் ஏற்பட்டிருக்கும் என்பதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2026 மே மாதத் தேர்வுச் சுழற்சியின்போது பதிவு செய்யப்பட்ட விவரங்கள், தேர்வர்களின் தகுதிநிலை மற்றும் அவர்களால் தேர்வு செய்யப்பட்ட தேர்வு மையங்கள் ஆகியவை, மீண்டும் நடத்தப்படவுள்ள தேர்வுக்கும் அப்படியே எடுத்துக்கொள்ளப்படும். இதற்குப் புதிதாகப் பதிவு செய்யத் தேவையில்லை. கூடுதல் தேர்வுக்கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாது. இத்தேர்வு தேசிய தேர்வு வளங்களைப் பயன்படுத்தி மீண்டும் நடத்தப்படும். மீண்டும் நடத்தப்படவுள்ள தேர்வுத் தேதிகள் மற்றும் மீண்டும் வெளியிடப்படவுள்ள நுழைவுச்சீட்டு (Admit Card) குறித்தகால அட்டவணை உள்ளிட்ட மேலதிகத் தகவல்கள், முகமையின் அதிகாரப்பூர்வ வழிமுறைகள் வாயிலாக வெளியிடப்படும். தேர்வர்கள் மற்றும் பெற்றோர்கள் இவ்வதிகாரப்பூர்வ வழிமுறைகளை மட்டுமே சார்ந்திருக்குமாறும், சமூக ஊடகங்களில் பரவிவரும் சரிபார்க்கப்படாத தகவல்களைப் புறக்கணிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள் கசிவு விவகாரம்: 2026- 27-ம் ஆண்டு எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கைக்காக கடந்த மே 3-ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வில் கேட்கப்பட்ட 200 வினாக்களில் 80%-க்கும் கூடுதலான வினாக்கள் தேர்வுக்கு பல நாள்கள் முன்பே ராஜஸ்தானில் வெளியாகி விட்டதாகவும், இது தொடர்பாக அம்மாநில காவல்துறை வழக்குப் பதிவு செய்து விசாரிப்பதாகவும் செய்திகள் வெளியாகின.

மருத்துவம் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் சார்ந்த விஷயத்தில் தேசிய தேர்வு முகமை தொடர்ந்து அலட்சியமாக நடந்து கொள்வதாக அரசியல் கட்சிகளின் விமர்சனங்களும் எழுந்தன. வினாத்தாள் கசிந்ததால் கடந்த 3-ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், மறு தேர்வு நடத்தப்படும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. ஆனால், மறுதேர்வுக்கான தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# “அரசியலில் திமுக தான் சீனியர்” சட்டப்பேரவையில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி பேச்சு

சென்னை:

"முதல்வரும், நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இருந்தாலும் அரசை நடத்துவதில் திமுகதான் சீனியர் பேட்ச். 1967-லேயே ஆட்சிக்கு வந்த கட்சி திமுக. அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அதை ஏற்க நீங்களும் தயாராக இருங்கள்" என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தலைவராக ஜேசிடி பிரபாகர் தேர்வு செய்யப்பட்டார். அவரை அவை முன்னவர் செங்கோட்டையன், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இருவரும் இணைந்து கைப்பிடித்து அழைத்துச் சென்று பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைத்தனர்.

பின்னர் சட்டப்பேரவையில் உதயநிதி ஸ்டாலின் பேசும்போது, "தமிழ்நாட்டில் இனி நடக்கும் எந்த நிகழ்ச்சியிலும் தமிழ்த்தாய் வாழ்த்து 2-ம் இடத்திற்குச் செல்லக்கூடாது. அதனை இந்த அரசு அனுமதிக்கக் கூடாது. நாங்களும் அனுமதிக்க மாட்டோம். முதல்வர் பதவியேற்பு விழாவில் நடந்த தவறை, ஆளுநர் உரையின்போது நடக்க அனுமதிக்கக் கூடாது; நாங்களும் அனுமதிக்க மாட்டோம்.

முதல்வர் விஜய் நேற்று எதிர்க்கட்சி தலைவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். இந்த அரசியல் நாகரீகம் இந்த சட்டப்பேரவையிலும் தொடர வேண்டும் என்பதுதான் எங்கள் எதிர்பார்ப்பு. திமுக இந்த சட்டப்பேரவையில் எதிரி கட்சியாக இல்லாமல், ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும் என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

முதல்வரும், நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். இருந்தாலும் அரசை நடத்துவதில் திமுகதான் சீனியர். 1967-லேயே ஆட்சிக்கு வந்த கட்சி திமுக. எங்களின் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அதை ஏற்க நீங்களும் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால் எப்போதும் நமக்கு தமிழகத்தின் நலம்தான் முக்கியம்.

இந்தியாவே திரும்பி பார்த்த சட்டப்பேரவை இது; இங்கு ஆரோக்கியமான, ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு இடம் கொடுத்து, ஜனநாயக மாண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேரவைத் தலைவர் நடுநிலையோடு செயல்பட வேண்டும்.

நாம் இப்போது ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என எதிரெதிர் வரிசையில் அமர்ந்திருந்தாலும், தமிழக மக்களின் நலன் என வரும்போது, முன்வரிசையில் நின்று உழைக்க வேண்டும்.

ஆளுங்கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்காமல் போனாலும், திமுக தோழமை இயக்க உறுப்பினர்கள் ஆதரவோடு ஆட்சி அமைத்திருக்கும் புதிய அரசு மற்றும் முதல்வருக்கும் எனது வாழ்த்துகள். இது எனது அரசல்ல; நமது அரசு என திமுக தலைவர் ஸ்டாலின் சொல்வார். அதே போல இந்த அரசும் அனைவருக்குமான அரசாக செயல்பட வேண்டும்.

தற்போது இங்கு முதல்முறை சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பெண் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அதிகளவில் வந்திருப்பது மகிழ்ச்சி. மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயம் ஒழிக்கப்பட வேண்டும். வெல்க தமிழ்; வாழ்க தமிழ்நாடு" இவ்வாறு அவர் பேசினார்.



**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழகத்தில் தேர்தல் விதி முடிவுக்கு வந்ததை அடுத்து, ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு வைக்கப்பட்ட சீல், வாணாபுரம் தாசில்தார் வெங்கடேசன், அரியலூர் வருவாய் ஆய்வாளர் மாரிவளன் முன்னிலையில் அகற்றப்பட்டது, அப்போது கிராம நிர்வாக அலுவலர் அந்தோணி பாஸ்கர் உடன் இருந்தார் .




தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் C.ஜோசப் விஜய் பதவி ஏற்பு விழாவை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதியில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் T.P.V.V விபின் சக்கரவர்த்தி அவர்களின் ஏற்பாட்டில் ஆலங்குளம் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்பு வழங்கி பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது. இதில் தமிழக வெற்றி கழக மாவட்ட நிர்வாகிகள், அணி நிர்வாகிகள், ஒன்றியம், பேரூர் நிர்வாகிகள், கிளை, வார்டு நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள்,மற்றும் கூட்டணி கட்சி காங்கிரஸ்,விசிக, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தொண்டர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# பொதுமக்களுக்கு இடையூறு செய்தால் நடவடிக்கை: கட்சியினருக்கு தவெக எச்சரிக்கை



சென்னை: பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தவெகவினர் யாரும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது என்றும், கொண்டாட்டங்களில் ஈடுபடக் கூடாது என்றும், மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தவெக பொதுச் செயலாளர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில்,"தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் தமிழக வெற்றிக் கழகம்.

தமிழ்நாட்டு மக்களின் ஏகோபித்த நம்பிக்கையைப் பெற்ற,தமிழ்ச்சொந்தங்களின் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடிய தமிழ்நாடு முதல்வர் மிகப் பெரிய பொறுப்பை நமக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். அதை நோக்கியே நாம் பயணிக்க வேண்டும்.

எனவே, தவெகவினர் யாரும் பிறந்தநாள் விழா மற்றும் குடும்ப விழாக்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலைகளிலோ, மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களிலோ அல்லது போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலோ எங்கும் பேனர்கள், பதாகைகள் உள்ளிட்டவற்றைக் கண்டிப்பாக வைக்கக் கூடாது. பொதுமக்களுக்கு இடையூறாக எவ்விதக் கொண்டாட்டங்களிலும் யாரும் கண்டிப்பாக ஈடுபடக் கூடாது.

பேனர்கள்,கொண்டாட்டங்கள் உள்ளிட்ட எவற்றின் வாயிலாகவும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் யாரேனும் நடந்துகொண்டால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் தவெக தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக் கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

# மானாமதுரை அருகே ஆண் டாக்டர்கள் மீது கிராம மக்கள் குற்றச்சாட்டு

## கலெக்டரிடம் மனு



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையை அடுத்துள்ளது தஞ்சாக்கூர். இந்த ஊரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்த நீலாதேவி என்ற பெண் மருத்துவர் விடுப்பில் சென்ற போது அவருக்குப் பதிலாக வந்த இரண்டு ஆண் மருத்துவர்கள் மீது கிராம மக்கள் குறை கூறி அவர்கள் ஊர்வலமாக வந்து கோஷமிட்டு பின்பு மாவட்ட ஆட்சியரிடம் புகார்மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருந்ததாவது...

தஞ்சாக்கூர் அரசு மருத்துவமனைக்கு அந்தப் பகுதியில் உள்ள முக்கியஸ்தர்கள் அவ்வப்போது அன்பளிப்பாக கொடுத்துவந்த மெத்தைகள் மருத்துவ உபகரணங்கள் யூ.பி.எஸ் - மற்றும் பேட்டரிகள், இதர பொருட்கள் மற்றும் மருத்துவமனைக்குச் சொந்தமான இரும்புச் சாமான்கள் உள்ளிட்ட ஏராளமான பொருட்களை புதிதாக வந்த மருத்துவர்கள் வெளியில் கொண்டு போய்விற்றுவிட்டார்கள். அதற்கு சாட்சிகள் உள்ளது . இந்த மருத்துவர்கள் மருத்துவமனையின் முக்கிய தஸ்தாவேஸ்துகளைக் கூட நடப்பில் இருக்கும் டாக்டரிடம் ஒப்படைக்கவில்லை . இந்த இரண்டு மருத்துவர்கள் மீதும் பாலியல் ரீதியான குற்றச்சாட்டுகளும் உள்ளது . மேலும் மருத்துவமனைக்கு செலவு செய்ததாக லட்சக்கணக்கான மதிப்பீட்டில் செலவு பில்களை இந்த இரண்டு மருத்துவர்களும் வைத்துள்ளனர் . இந்த செலவு பில்களில் விடுப்பு முடிந்து வந்த பெண் மருத்துவர் நீலாதேவி கையெழுத்து இடவேண்டும் என்று கேட்டிருக்கின்றனர். இதற்கு அவர் மறுத்ததால் மருத்துவமனையில் பிரச்சனை ஏற்பட்டுள்ளது.இதுதொடர்பாக கிராம மக்கள் மாவட்ட சுகாதார அலுவலரிடம் புகார் கொடுத்தும் அவர் நடவடிக்கை எடுக்காமல் இதற்கு மாறாக செலவு பில்களில் கையெழுத்து போடச் சொல்கிறார் . இந்தப் பிரச்சினையின் அடிப்படையில் மாவட்ட சுகாதார அலுவலர் அவர்கள் டாக்டர் நீலாதேவிக்கு கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து இன்றுவரை மருத்துவமனையின் நிர்வாகப் பொறுப்பை வழங்கவில்லை . எனவே சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்தப் பிரச்சனைகளின் அடிப்படையில் அதன் உண்மைத்தன்மையை அறிய அவர் மருத்துவமனையை ஆய்வு செய்ய வேண்டும் . தஞ்சாக்கூரில் செயல்படும் நோயாளிகள் நலச்சங்க கூட்டத்திலும் கணக்கை வைத்து உரிய விசாரணை நடத்த வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது .

## உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு

# தூத்துக்குடியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறப்பாகப் பணியாற்றிய மூத்த செவிலியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் கேடயம் வழங்கிப் பாராட்டினார்




'கைவிளக்கேந்திய காரிகை' என்று உலகத்தாரால் அன்போடு அழைக்கப்படும் புளோரான்ஸ் நைட்டிங்கேல் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மே 12-ஆம் தேதி உலக செவிலியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி,தூத்துக்குடி அரசு செவிலியர் கல்லூரியில் சிறப்பு விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், மருத்துவத் துறையில் செவிலியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தன்னலமற்ற சேவையைப் போற்றிப் பேசினார். நோயாளிகளின் நலனுக்காக இரவு பகலாகப் பாடுபடும் செவிலியர்கள், சமூகத்தின் மிக முக்கியமான தூண்கள் என்று அவர் புகழாரம் சூட்டினார். செவிலியர் துறையில் 25 ஆண்டுகளைக் கடந்து, எவ்விதத் தொய்வுமின்றி மிகச் சிறப்பாகப் பணியாற்றி வரும் மூத்த செவிலியர்களுக்கு, அவர்களது சேவையைப் பாராட்டி மாவட்ட ஆட்சியர் கௌரவக் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அதிகாரிகள், செவிலியர் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஏராளமான செவிலிய மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# முதல்வரின் சிறப்பு அதிகாரியாக ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனம்




சென்னை:தமிழக முதல்வரின் சிறப்பு அதிகாரியாக (அரசியல்) ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், முதல்வர் விஜய்யின் ஜோதிடர் என்பது கவனிக்கத்தக்கது.

தமிழக முதல்வராக விஜய் பதவியேற்ற பிறகு முக்கிய அரசு அதிகாரிகள் மாற்றப்பட்டும், புதிதாக நியமிக்கப்பட்டும் வருகின்றனர்.


அந்தவகையில்,முதல்வர்விஜய்க்குநீண்டகாலமாக ஆஸ்தான ஜோதிடராக இருந்து வரும் ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல்,கட்சியின் முக்கிய முடிவுகளில் திரைமறைவில் முக்கியப் பங்காற்றி வந்ததாகக் கூறப்படுகிறது.

தவெகவின் செய்தித்தொடர்பாளராக ஊடகங்களில் அறியப்பட்ட இவருக்கு, இப்போது நேரடியாகவே அரசுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

அதில், முதல்வர் விஜய்யின் சிறப்பு அதிகாரியாக (அரசியல்) ரிக்கி ராதன் பண்டிட் வெற்றிவேல் நியமனம் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் விஜய்யின் அரசியல் ரீதியான நகர்வுகள் மற்றும் கட்சிக்கும் அரசுக்கும் இடையிலான ஒருங்கிணைப்புப் பணிகளில் இவர் இனி முக்கியப் பங்காற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழக அரசு சேவை பெறும் உரிமை சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது




இதுகுறித்து கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜேசப்விஜய் அவர்களுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் பொதுமக்கள் அரசு அலுவலகங்களில் அன்றாடம் எதிர்கொள்ளும் காலதாமதம், நிர்வாக அலட்சியம், தேவையற்ற அலைச்சல், லஞ்ச கோரிக்கை போன்றபிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாக "சேவை பெறும் உரிமை சட்டம்" (*Right to Public Services Act*) என்ற வலுவான சட்டத்தை தமிழகத்தில் கொண்டு வர வேண்டும். இன்றைய சூழலில், பொதுமக்கள் சாதி சான்று, வருமானச் சான்று, பட்டா மாற்றம், முதியோர் ஓய்வூதியம், குடும்ப அட்டை, மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு, சமூக நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட அடிப்படை அரசு சேவைகளை பெற பலமுறை அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. பல நேரங்களில் மனுக்கள் எந்த காரணமும் கூறாமல் நீண்ட நாட்கள் நிலுவையில் வைக்கப்படுகின்றன.

குறிப்பாக: மனு பெற்றுக் கொண்டும் ரசீது வழங்காத நிலை, "பிறகு வாருங்கள்" என்று தொடர்ந்து அலைய விடுதல், கோப்புகளை தேவையின்றி தாமதப்படுத்துதல், அதிகாரிகள் நேரடி பதில் வழங்காமல் தவிர்த்தல், வாய்மொழி மறுப்பு வழங்குதல், சில இடங்களில் லஞ்சம் இல்லாமல் சேவை கிடைக்காத சூழல், ஆன்லைன் விண்ணப்பங்களுக்கும் சரியான காலக்கெடு இல்லாமை போன்ற பல பிரச்சினைகள் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த நிலையை மாற்றுவதற்காகவே இந்தியாவின் பல மாநிலங்களில் "சேவை பெறும் உரிமை சட்டம்" வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

முதன்முதலில் மத்தியப் பிரதேசம் *18.08.2010* அன்று இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தியது.

அதனைத்தொடர்ந்து பீகார், டெல்லி, பஞ்சாப், ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா, உத்தரகாண்ட், கேரளா உள்ளிட்ட பல மாநிலங்கள் இந்தசட்டத்தைகொண்டு வந்துள்ளன.

இந்தசட்டத்தின் மூலம் அரசு சேவையை மக்களின் சட்ட உரிமையாக மாற்றுவதாகும்.

இந்த சட்டம் தமிழகத்தில் அமல்படுத்தப்பட்டால், அரசு அலுவலக சேவைகளுக்கு குறிப்பிட்ட காலவரையறை நிர்ணயம் செய்யப்படும். உதாரணமாக: சாதி சான்று - 15 நாட்கள், வருமானச் சான்று 7 நாட்கள், பட்டா மாற்றம் - 30 நாட்கள், சிட்டா / அடங்கல் நகல் - 7 நாட்கள், முதியோர் ஓய்வூதிய மனு - 30 நாட்கள் என ஒவ்வொரு சேவைக்கும் காலக்கெடுவுடன் வழங்கப்படலாம்.

மேலும், ஒவ்வொரு சேவைக்கும் பொறுப்பான அதிகாரி நியமிக்கப்படுவார். மனு அளித்தவுடன் ரசீது மற்றும் கண்காணிப்பு எண் வழங்குவது கட்டாயமாகும். சேவை வழங்க மறுத்தால், அதிகாரி எழுத்துப்பூர்வ காரணம் தெரிவிக்க வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் பொதுமக்களுக்கு மேல்முறையீட்டு உரிமை வழங்கப்படும். காரணமின்றி தாமதப்படுத்தும் அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கப்படும். தேவையான சூழலில் பொதுமக்களுக்கு இழப்பீடும் வழங்கப்படும். அனைத்து சேவைகளும் டிஜிட்டல் கண்காணிப்பு முறையில் கொண்டு வரப்படும்.

தமிழகத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் *e-Sevai, TNeGA*, ஆன்லைன் வருவாய் சேவைகள் போன்ற அமைப்புகளுடன் இந்த சட்டம் இணைக்கப்பட்டால் நிர்வாக வெளிப்படைத் தன்மை மேலும் வலுப்பெறும்.

இந்த சட்டம் அமலுக்கு வந்தால், பொதுமக்களின் அலையாட்டம் குறையும், லஞ்சம் குறைய வாய்ப்பு அதிகரிக்கும்,நிர்வாகபொறுப்புணர்வு உயரும், அரசு சேவைகள் விரைவாக கிடைக்கும், கிராமப்புற மக்களும் பயனடைவார்கள், டிஜிட்டல் நிர்வாகம் வலுவடையும், அரசு மீதான மக்களின் நம்பிக்கை அதிகரிக்கும். குறிப்பாக வருவாய் துறை, உள்ளாட்சி துறை, சமூக நலத்துறை, மின்சார வாரியம், குடிநீர் வாரியம் போன்ற மக்கள் தொடர்பு அதிகமுள்ள துறைகளில் இந்த சட்டம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

அரசு சேவை என்பது தயவு அல்ல; மக்களின் உரிமை" என்ற புதிய நிர்வாகபண்பாட்டை தமிழகத்தில் உருவாக்க தங்களின் தலைமையிலான அரசு முன்வரும் என எதிர்பார்க்கிறோம்.

எனவே, தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு "தமிழ்நாடு சேவை பெறும் உரிமை சட்டம்" என்ற பெயரில் விரைவாக சட்டம் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த வேண்டும். என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் கூறியுள்ளார்.

# வினாத்தாள் கசிந்த விவகாரம்: நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய அன்புமணி கோரிக்கை



சென்னை:நீட்தேர்வை மத்திய அரசு நிரந்தரமாகரத்துசெய்ய வேண்டும். ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் நீட் தேர்வு வினாக்கள் கசிந்தது குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய அரசை பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "2026- 27-ம் ஆண்டு எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கைக்காக கடந்த மே 3-ம் தேதி நடத்தப்பட்ட நீட் தேர்வில் கேட்கப்பட்ட 200 வினாக்களில் 80%-க்கும் கூடுதலான வினாக்கள் தேர்வுக்கு பல நாள்கள் முன்பே ராஜஸ்தானில் வெளியாகிவிட்டதாகவும்,இதுதொடர்பாக அம்மாநில காவல்துறை வழக்குப்பதிவு செய்து விசாரிப்பதாகவும் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. மருத்துவம் பயிலும் மாணவர்களின் எதிர்காலம் சார்ந்த விஷயத்தில் தேசிய தேர்வு முகமை தொடர்ந்து அலட்சியமாக நடந்து கொள்வது கண்டிக்கத்தக்கது.

### தூத்துக்குடியில் சி.எம். என் பாய்ஸ் நடத்தும் 2ஆம் ஆண்டு PSTS உதயசங்கர் நினைவு கோப்பைக்கான

## மாநில அளவிலான கைப்பந்து இறுதி போட்டி வெற்றி பெற்ற அணிக்கு கோப்பை மற்றும் பரிசுத்தொகையை மேயர் ஜெகன் பெரியசாமி வழங்கினார்

தூத்துக்குடியில்சி.எம். என் ஆண்கள் கைப்பந்து கிளப் நடத்தும் 2ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்ட முன்னாள் பாய்ஸ் கிளப் அணிக்கு ரூ.30,000 ரொக்கப் பரிசு மற்றும் உதயசங்கர் நினைவு கோப்பையும், இரண்டாம் இடம் பிடித்த மன தைரியம் ஆரோக்கியம், கிடைக்கும் தூத்துக்குடி மாநகராட்சியை பொறுத்தவரை அடுத்த 3 அல்லது 5 ஆண்டுகள்



கைப்பந்து கழகதலைவர் PSTS.உதயசங்கர் நினைவு கோப்பைக்கான மாநில அளவிலான கைப்பந்து 2 நாள் போட்டி சின்னமணிநகர் சிஎம்-என் பார்க்கில் நடைபெற்றது. பரிசளிப்பு விழாவிற்கு கவுன்சிலர் சந்திரபோஸ் தலைமையில் மாவட்ட கைப்பந்து கழகதலைவர்ஜான்வசீகரன் செயலாளர் ரமேஷ்குமார் துணைத்தலைவர் நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அபிலாஷ் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு

முதலிடம் பிடித்த மாரி சென்னை பனிமலர் அணிக்கு ரூ 25,000 மற்றும் கோப்பையும், 3ம் இடம்பிடித்ததூத்துக்குடி கால்டுவெல் வாலிபால் கிளப் அணிக்கு ரூ.20000 மற்றும் கோப்பையும், 4ம் இடம் பிடித்த கோவில்பட்டி லயன்ஸ் வாலிபால் கிளப் அணிக்கு ரூ. 15000 மற்றும் கோப்பையும் வழங்கினார். பின்னர் மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழகத்தில் பல்வேறு விளையாட்டு போட்டிகள் இருந்து வருகின்றன. அதில் துடிப்பு மிக்க இளைஞர்கள் பங்கெடுத்து விளையாடுவது மகிழ்ச்சியளிக்கிறது. திமுக ஆட்சியில் ஸ்டாலின் எல்லா விளையாட்டுகளையும் ஊக்குவித்து கௌரவித்தார். இந்த விளையாட்டு போட்டிகளின் மூலம் எப்படி இருக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் சிந்தித்து எல்லோருக்கும் நன்மை கிடைக்கும் வகையில் புதிய பூங்காக்கள் நடைபயிற்சி மற்றும்பல்வேறுவிளையாட்டுகள் விளையாடுவதற்கு வசதியாக ஏற்படுத்தி கொடுத்துள்ளோம். தூத்துக்குடிகாரங்க பாசமானவர்கள் அன்புக்கு கட்டுப்படுவார்கள். அனைவரும் எல்லா ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு ஏதாவது விளையாட்டு போட்டியை தேர்ந்தெடுத்து விளையாடுவது நல்லது என்று பேசினார்.பின்னர் சிறந்த விளையாட்டு வீரர்களுகளை ஊக்கவிக்கும்வகையில்கோப்பைகள் பரிககள் வழங்கப்பட்டது.

## நந்தா பொறியியல் கல்லூரியில் தொழில்துறைக் கருத்தரங்கம்



ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் இயந்திரவியல் மற்றும் ஆராய்ச்சித் துறையின் சார்பில்இந்தியஅமைச்சகத்தின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சிலின் உயிரி தொழல்நுட்பத் துறையுடன் இணைந்து "நிலையான சுகாதார பராமரிப்பிற்காக உருவாகிவரும் போக்குகள்" என்கிற தலைப்பில் தொழில்துறைக் கருத்தரங்கம் இனிதே நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைப்பெற்ற இக்கருத்தரங்கிற்கு திருச்செங்கோடு கே. எஸ். ரங்கசாமி தொழில்நுட்பக்கல்லூரியின்பேராசிரியர் முனைவர் பி. கல்பனா மற்றும் பண்ணாரி அம்மன் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் ஆர். கோமதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். மேலும், கல்லூரியின் முதல்வர் முனைவர் யு. எஸ். ரகுபதி, புலமுதல்வர்கள் முனைவர் சி.என். மாரிமுத்து மற்றும் முனைவர் எம். ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். முன்னதாக இயந்திரவியல் துறையின் தலைவர் முனைவர் எம். முத்துகுமார் அவர்கள் வரவேற்று பேசினார்.

இதனை தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் பேராசிரியர் முனைவர் பி. கல்பனா பேராசிரியர் முனைவர் ஆர். கோமதி மற்றும் நந்தா கல்லூரியின் பேராசிரியர் முனைவர் கே. லலிதா ஆகியோர் "நிலையான சுகாதார பராமரிப்பிற்காக உருவாகிவரும் போக்குகள்" பற்றிய தகவல் களஞ்சியங்களை காணொலி காட்சி மூலம் விளக்கம் அளித்தார்கள். மேலும் காலநிலை மாற்றம், உயிரி தொழில்நுட்ப மேலாண்மை போன்றவற்றில் உலகளாவிய சவால்களை சரிசெய்வதில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு போன்ற பல்வேறு விஷயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள்.

நிகழ்வின் முடிவில் ஒருங்கிணைப்பாளர்களான உதவி பேராசிரியர் முனைவர் எஸ். மகிபாலன் மற்றும் எஸ். முருகானந்தம் ஆகியோர் நன்றி கூறினார்கள்.

இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

## “தலித் சமூகத்தைச் சார்ந்தவர் முதல்வராகும் அளவுக்கு தமிழ்ச் சமூகம் தயாராகவில்லை” திருமாவளவன் பேட்டி

சென்னை: 'தமிழகத்தில் தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் முதல்வர் ஆகும் அளவுக்கு தமிழ்ச் சமூகம் இன்னும் தயாராகவில்லை என்பது அனைவரும் அறிந்த கசப்பான உண்மையாகும்' என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இன்று செய்தியாளர்கள் சிலர் என்னை சந்தித்தார்கள். அப்போது பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள். அப்போது, "தங்களை முதல்வராக்க நடந்த முயற்சியை காங்கிரஸ் முறியடித்துவிட்டதாகச் சொல்கிறார்களே" என்று ஒரு செய்தியாளர் கேட்டார். அதற்கு நான், ' அப்படியொரு முயற்சி நடந்ததாக எனக்கும் தகவல் கிடைத்தது' என்று பதிலளித்தேன்.

எனக்கு நெருங்கிய நண்பர்கள் சிலர் என்னை அணுகி அதைப் பற்றி பேசினார்கள் என்பதையே கூறினேன். 'திமுகவோ அதிமுகவோ அதிகாரபூர்வமாக யாரும் என்னை அப்படி அணுகவில்லை. நானும் யாரிடமும் பேசவில்லை. நேற்றும் இன்றும் இது குறித்து ஊடகங்களில் உறுதிபடுத்தப்படாத செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தான். அவ்வினாவுக்கு நான் விளக்கமளித்தேன். ஆனால், அதனை வேறு பொருள்படும்படி தலைப்பிட்டு செய்திகளைப் பரப்பி பரபரப்பை ஏற்படுத்துவது ஊடக அறமில்லை. தமிழ்நாட்டில் தலித் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் முதல்வர் ஆகும் அளவுக்கு தமிழ்ச் சமூகம் இன்னும் தயாராகவில்லை என்பது அனைவரும் அறிந்த கசப்பான உண்மையா-



கும். இந்தியாவில் உத்தரப் பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்ட்ரா,பீகார் மற்றும்பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தலித்துகள் முதலமைச்சர்களாக ஆட்சி பீடத்தில் கோலோச்சிய வரலாறு நடந்தேறியுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் இன்னும் ஒரு நூறாண்டானாலும் அது கனவாகவே இருக்கும் என்பதை அறிந்தவன் நான்.

எனினும், இன்றைய அரசியல் சூழலில் அப்படியொரு பேச்சு நடந்ததாக சொல்லப்பட்டது. ஆகவே, 'எனக்கும் தகவல் கிட்டியது' என்று ஒரு ஊடகப் பணியாளரின் கேள்விக்கு நான் விடையிறுத்தேன். அதனைத் திரித்து 'பிறிதொரு பொருளைத்தரும் உள்நோக்கத்தோடு' ஒரு சில ஊடகங்கள் செய்திகளைப் பரப்புவது வேதனையளிக்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

## அமமுகவில் இருந்து காமராஜ் எம்எல்ஏ நீக்கம் தவெகவை ஆதரித்ததால் தினகரன் நடவடிக்கை

சென்னை: 'தவெகவுக்கு தன்னிச்சையாக ஆதரவளித்துள்ள அமமுகவின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.காமராஜ், கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கிவைக்கப்படுகிறார்' என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் அறிவித்துள்ளார். வெளியிட்ட அறிக்கையில், 'அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மன்னார்குடி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ். காமராஜ், கட்சியின் நிலைப்பாட்டினை மீறி இன்று சட்டப்பேரவையில் தன்னிச்சையாகத் தமிழக வெற்றிக் கழகத்துக்கு தனது ஆதரவைத் தெரிவித்திருப்பது கட்சியின் குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணானது.

எஸ்.காமராஜின் இன்றைய செயல்பாடு, அவரின்வெற்றிக்காகப்பாடுபட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும், அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மன்னார்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் இழைத்திருக்கும் மிகப்பெரிய துரோகம் ஆகும்.

கட்சியின் கொள்கை குறிக்கோள்களுக்கும், கோட்பாடுகளுக்கும் முரணான வகையில்



செயல்பட்டதாலும், கழகத்தின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாலும், கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கமும், அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்ட காரணத்தினாலும், எஸ்.காமராஜ் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## ஆட்சி அமைக்க அதிமுக திமுக கூட்டணியா? சி.வி.சண்முகத்திற்கு ஆர்.எஸ்.பாரதி பதில்



திமுகவுடன் எடப்பாடி பழனிசாமி கூட்டணி அமைக்க முயன்றதாக சி.வி.சண்முகம் இன்று காலையில் ஒரு பரபரப்பான குற்றச்சாட்டை முன் வைத்தார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக சென்னை அறிவாலயத்தில் திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

அதிமுக உடைவதற்கு எங்களை காரணம் சொல்கின்றனர். திமுக - அதிமுக கூட்டணி என்பது வதந்தி.

திமுக ஆக்கப்பூர்வமான எதிர்கட்சியாக செயல்படும் என திமுக தலைவர் அன்றைய தினமே தெரிவித்துவிட்டார். கம்யூனிஸ்ட் தலைவர் பேபி தான் கூறியதை வதந்தி என மறுத்துவிட்டார்.

பூட்டி வைத்துள்ளவர்கள் கதவை உடைத்து கொண்டு போவதற்கு காரணம் தேடுகின்றனர். நாங்கள் வெற்றிபெற்ற போது ஆடவில்லை. தோல்வி வந்தபோதும் வாடவில்லை.

1991 தேர்தலில் ஒரே தொகுதியில் தான் வென்றோம். அப்போது கூட திமுக உடையவில்லை.

சி.வி.சண்முகம் தரப்பை விஜய் சேர்த்து கொள்வாரா என அவரை கேட்க வேண்டும். சி.வி.சண்மும் எப்போதும் பதவியில் இருந்தவர். அவருக்கு பதவி ஆசை.திராவிட கட்சிகளுக்கு மாற்று என பேசிய விஜய் அதிமுக எம்.எல்.ஏக்களை ஏற்பாரா? என கேள்வி எழுப்பினார். மேலும் தமிழ்நாட்டில் கட்சி மாறுவது, மைனாரிட்டி ஆட்சி என இதுவரை இல்லாத விஷயங்கள் நடந்து வருகிறது. திமுகவைப் பொருத்தவரை எந்த முடிவு வந்தாலும் நாங்கள் நிலையாக இருப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வாட்ஸ்அப்பில் அழைப்பிதழை பதிவிறக்கியதால் ரூ.5 லட்சம் இழந்த பெங்களூரு தொழிலதிபர்



பெங்களூரு: பெங்களூருவை சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் தனக்கு வாட்ஸ்-அப்பில் வந்த திருமண அழைப்பிதழை பதிவிறக்கம் செய்துள்ளார். உடனே அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.5 லட்சம் பறிபோனது.

பெங்களூருவைச் சேர்ந்தவர் நூர் நஹீத் கான் (42). தொழிலதிபரான இவருக்கு நேற்று முன் தினம் வாட்ஸ்-அப்பில் திருமண அழைப்பிதழ் வந்துள்ளது. அந்த குறுஞ்செய்தியில், "எங்கள் திருமணத்திற்கு உங்களை அழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். விழாவின் முழு விவரங்களுக்கு, இணைக்கப்பட்டுள்ள அழைப்பிதழைப் பதிவிறக்கம் செய்யவும்" என்று எழுதப்பட்டிருந்து. இதையடுத்து நூர் நஹீத் கான் அந்த இணைப்பில் ஏபிகே கோப்பு வடிவில் இருந்த அழைப்பிதழை பதிவிறக்கம் செய்தார். உடனடியாக அவரது செல்போனில் ஒரு செயலி நிறுவப்பட்டு, வங்கிக் கணக்கில் இருந்து ரூ.5 லட்சத்து 440 எடுக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்தது.

இதையடுத்து அவர் பெங்களூரு இணைய குற்றப்பிரிவு போலீஸில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில், தகவல் தொழில்நுட்பச் சட்டம், பிஎன்எஸ் சட்டப் பிரிவுகளின் கீழ் அடையாளம் தெரியாத நபர்கள் மீது மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.




# “நீட் தேர்வுக்கு எதிராக தவெக அரசும் உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்”

## மு.க.ஸ்டாலின் கோரிக்கை



சென்னை: "தமிழகத்தில் புதிதாக அமைந்திருக்கும் அரசும் நீட் தேர்வுக்கு எதிரான தனது உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்" என திமுகதலைவரும்,முன்னாள் முதல்வருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "இந்த ஆண்டும் நீட் வினாத்தாள் கசிவு முறைகேடுகள் வெளியாகி, தேர்வு ரத்து செய்யப்பட்டுள்ளது. லட்சக்கணக்கானமாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கிறார்கள். ஒரு தேர்வின் ஒவ்வொரு படிநிலையிலும் மோசடி நிறைந்ததாகவே நீட் இருக்கிறது. சொல்லி வருவதுபோல,நீட் தேர்வு மோசடி இல்லை, நீட்டே ஒரு மோசடி தான்.

ஆண்டுதோறும் மாணவர்களின் வாழ்க்கையோடும், மாநில மருத்துவக் கட்டமைப்பின் எதிர்காலத்தோடும், மக்களின் உயிரோடும் விளையாடும் நீட் தேர்வுமுறை ஒழிக்கப்பட வேண்டும். மீண்டும் நீட் தேர்வு நடத்துவதால் ஏற்படும்தாமதம்,மாணவர்களின் உயர் கல்விக் கனவில் குழப்பங்களைத்தான் ஏற்படுத்தும். அதனால், பழையபடி பனிரெண்டாம் வகுப்பு தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மருத்துவ இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

புதிதாகஅமைந்திருக்கும் அரசும் நீட் தேர்வுக்கு எதிரான தனது உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோரும் எங்க திராவிட மாடல் அரசின் சட்ட நடவடிக்கைகளை, புதிய அரசும் கையிலெடுத்து, நம் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.



மறைந்த முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர்,முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் துணைவியார் வரலட்சுமி இளங்கோவன், அவரது மகன் சஞ்சய் சம்பத் முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈவெராவின் மகள் செல்வி சமணா மற்றும் சஞ்சய் சம்பத்தின் மகன் கருண் ஆகியோர், முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் துர்கா ஸ்டாலின் அவர்களது இல்லத்தில் சந்தித்தனர். அப்போது தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து பேசினார்கள்.

## ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (12.05.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், ஈரோடு மாவட்டம். கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், நஞ்சை கொளாநல்லி ஊராட்சியில் 15-வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் தூசு நீக்கும் இயந்திரத்தினைக் கொண்டு சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளில் உள்ள இதர தூசுமற்றும்குப்பைகளை அகற்றப்பட்டுவருவதையும். அதன் செயல்பாடுகளையும் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், இச்சிப்பாளையத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் லட்சுமிபுரம் முதல் கும்ரப்பபுரம் வரை சாலையோரப்பகுதியில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதையும், அங்குள்ள மரக்கன்றுகளுக்குதண்ணீர் விடும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின்வள்ளிபள்ளி முதல் இச்சிப்பாளையம் எல்.பி.பி. கால்வாய் கரையோரப்பகுதியில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளுக்கு தண்ணீர் விடும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கொடுமுடி பேரூராட்சி, மீனாட்சி ஹரன் நூலகம் மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தில் பராமரிக்கப்படும்அரசு போட்டித்தேர்வுகளுக்கான நூல்கள்.பிறநூல்கள்.தினசரி வருகை தரும் வாசகர்கள் மற்றும் அரசு தேர்வுகளுக்கு பயில்பவர்கள் விபரம், குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கமணி, அம்புரூஸ், கொடுமுடி பேரூராட்சி செயல் அலுவலர் விஜயன் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (12.05.2026) ஈரோடு மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், நஞ்சை கொளாநல்லியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் தூசு நீக்கும் இயந்திரத்தினைக் கொண்டு சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளில் உள்ள இதர தூசு மற்றும் குப்பைகளைஅகற்றும் செயல்பாடு மற்றும் பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# விஜய் முதலமைச்சரானது பற்றிய கேள்வி: பதிலளிக்காமல் சிரித்துக் கொண்டே சென்ற ரஜினிகாந்த்




சென்னை: விஜய் முதலமைச்சராக பதவியேற்றது தொடர்பாக நடிகர் ரஜினிகாந்திடம் கேள்வியெழுப்பப்பட்ட நிலையில், அதற்கு அவர் பதிலளிக்காமல் சிரித்துக் கொண்டே சென்ற வீடியோ தீயாக பரவி வருகிறது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் விஜய்யின் தவெக, தனிப்பெரும்பான்மை கட்சியாக உருவெடுத்து, பின்னர் திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தில் கோலோச்சி வந்த திமுக, அதிமுகவை ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்ற, கடந்த காலங்களில் எத்தனையோ மாற்றுக் கட்சிகளும், முன்னணி நடிகர்களும் அரசியல் களத்தில் இறங்கினர்.

ஆனால், அவர்கள் அடுத்தடுத்து காணாமல் போனதுதான் இதுவரை வரலாறாக இருந்தது. ஆனால், அந்த வரலாற்றினை தனது முதல் தேர்தலிலேயே மாற்றிக் காட்டியுள்ளார் தவெக தலைவர் விஜய்.

இது ஒருபுறம் இருக்க, விஜய் முதலமைச்சராக பதவியேற்றது முதலாக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பற்றிய பேச்சுகள் சமூக வலைதளங்களிலும், மக்கள் மத்தியிலும் அதிக அளவில் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, கடந்த 90 காலக்கட்டங்களில் ரஜினிகாந்த் கிட்டத்தட்ட அரசியலில் குதிக்கும் சூழல் உருவானது.அந்தசமயத்தில், ரஜினிகாந்துக்கு இருந்த ரசிகர்கள் கூட்டமும்,மக்கள் செல்வாக்கும் இப்போது இருந்ததை விட பல மடங்கு அதிகம்.

இருந்தபோதிலும், ஏதோ காரணத்துக்காக அன்றைக்கு ரஜினி அரசியலுக்கு வரவில்லை. தமிழக அரசியல் களத்தில் அன்று அரங்கேறி இருக்க வேண்டிய மாற்றங்கள், நிகழாமலேயே போனது. அதற்கு பிறகும், 2020-இல் ரஜினி அரசியலுக்கு வருவதாகஅறிவித்து, தனது உடல்நிலையை காரணம் காட்டி தனது முடிவில் இருந்து பின்வாங்கினார்.

இந்த சூழலில்தான், ரஜினியின் சிஷ்யனாக தன்னைஅடையாளப்படுத்தி திரையுலகுக்கு நுழைந்த விஜய், கிட்டத்தட்ட 3 தசாப்தங்களுக்கு பிறகு அந்த மாற்றத்தை தற்போது நிகழ்த்தி காட்டியுள்ளார். இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்த், சென்னை விமான நிலையத்திலிருந்து பெங்களூருக்கு இன்று புறப்பட்டார். அங்கிருந்து அவர் ரிஷிகேஷ் செல்லவுள்ளதாக கூறப்படு கிறது.

முன்னதாக, விமான நிலையத்துக்கு வந்த நடிகர் ரஜினிகாந்திடம், விஜய் தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றுள்ளது பற்றி நிருபர்கள் கேள்வியெழுப்பினர்.

ஆனால்,அந்தகேள்விக்கு ரஜினிகாந்த் எந்த பதிலும் சொல்லாமல், கையெடுத்து கும்பிட்ட படி சிரித்துக் கொண்ட அங்கிருந்து சென்றார்.இந்தவீடியோ சமூக வலைதளங்களில் தீயாக பரவி வருகிறது.

இதனிடையே, சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தனது திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா ஒன்றில் பேசிய விஜய், ரஜினியை மறைமுகமாக விமர்சித்ததாக ஒரு பேச்சு அடிபட்டது.

ரஜினியின் முந்தைய பேச்சுக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே, விஜய் அவ்வாறு பேசினார் என அவரது ரசிகர்கள் அப்போது கூறியது குறிப்பிடத்தக்கது.

# சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்ய முதலமைச்சர் விஜய் உத்தரவு



சென்னை: சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் வழங்கலில் உள்ள இடர்பாடுகளை போர்க்கால அடிப்படையில் களைந்து சீரான குடிநீர் விநியோகம்செய்திட உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும்என்றுதமிழக முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் இன்று (12.5.2026) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம்மற்றும்குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சிமற்றும்ஊராட்சித்துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகள் குறித்தும், கோடை காலத்தில் தடையின்றி குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விரிவான ஆய்விற்குப் பின்னர்,தமிழ்நாடு முதல்வர் பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர் வழங்கலில் உள்ள இடர்பாடுகளை போர்க்கால அடிப்படையில்களைந்து, லாரிகளின்மூலமாகவும், புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்தும், மாற்று ஏற்பாடுகள் செய்தும் சீரான குடிநீர் விநியோகம்செய்திட உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் திங்கட்கிழமைதோறும் குடிநீர் விநியோகத்தை ஆய்வு செய்து தொடர் கண்காணிப்புபணிகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

மேலும் எதிர்வரும் மழைக்காலத்தினை கருத்தில்கொண்டு,தூர்வாரும் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்புப் பணிகளை துரிதப்படுத்தி காலதாமதமின்றி தொடங்க பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில்,தலைமைச் செயலாளர் சாய் குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன்,பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டி.ஜி. வினய், நகராட்சி நிர்வாகத்துறைஇயக்குநர் மதுசூதன் ரெட்டி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைஆணையர் பி. பொன்னையா, பேரூராட்சிகள் இயக்குநர் பிரதீப் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) ஆனந்த்மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Rickshaw bomb explodes in Pakistan bazaar, kills 9 and injures over two dozen

*At least nine people were killed and more than two dozen injured after a bomb rigged to a rickshaw exploded in a crowded bazaar in northwest Pakistan on Tuesday, in the latest attack highlighting the worsening security situation near the Afghanistan border.*

*The blast occurred in Lakki Marwat district of Khyber Pakhtunkhwa province, where a bomb rigged to a rickshaw exploded in a busy bazaar, local police chief Azmat Ullah said. Two traffic police personnel and a woman were among those killed, The Associated Press reported.*



*No group has claimed responsibility for the attack so far, though suspicion is expected to fall on the Pakistani Taliban, or Tehrik-e-Taliban Pakistan (TTP). The outfit, which is separate from but allied with Afghanistan's Taliban rulers, has stepped up attacks on Pakistani security forces in recent years.*

*The bombing comes days after 15 police officers were killed in a suicide bombing and gun assault on a security post in the nearby Bannu district, prompting Islamabad to summon a senior Afghan diplomat to lodge a formal complaint.*

*Pakistani authorities have long accused Afghanistan's Taliban government of sheltering TTP militants. Kabul has denied the allegations, saying it does not allow militants to use Afghan soil to launch attacks against other countries.*

*Pakistan has witnessed a sharp rise in militant violence in recent years, further straining ties with Afghanistan.*

*The TTP and other militant groups have become more emboldened since the Afghan Taliban returned to power in Kabul in 2021.*

*Tensions between Pakistan and Afghanistan have remained high, with fighting since late February killing hundreds of people. In early April, the two sides held peace talks mediated by China, though sporadic cross-border clashes have continued at a lower intensity.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.